# ரபீ பருவ மக்காச்சோளத்தின் விலை நிலையாக இருக்கும்

மக்காச்சோளம் மாறுபட்ட பருவ நிலையை ஏற்று வளரக்கூடிய முக்கிய தாணிய பயிராகும். மக்காச்சோளம், 2014-15ம் ஆண்டில் 7.8 மில்லயின் எக்டரில் பயரிடப்பட்டு 16.3 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இதன் சராசரி உற்பத்தி எக்டருக்கு 2552 கிலோ கிராம் ஆகும்.

தமிழ்நாட்டில், 2014-15ம் ஆண்டில் மக்காச்சோளம் 0.33 மில்லியன் எக்டரில் சாகுபடி செய்யப்பட்டு 1.81 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. பெரம்பலூர், திருப்பூர், திண்டுக்கல், தேனி, தூத்துக்குடி, விருதுநகர், ஈரோடு, விழுப்புரம், நாமக்கல் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்கள் ரபீ பருவ மக்காச்சோளம் பயிரிடும் முக்கிய மாவட்டங்களாகும். தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மக்காச்சோளம் தேவைக்கு குறைவாகவே உள்ளது. கர்நாடகவிலிருந்து வரும் வரத்து செப்டம்பர் முதல் நவம்பர் மாத இறுதி வரை சந்தைக்கு வரும். தமிழ்நாட்டில் துவங்கும் வரத்து டிசம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை இருக்கும். மேலும், உள்நாட்டு தேவைகளை பூர்த்தி செய்ய ஆந்திராவிலிருந்து வரும் வரத்து மார்ச் மாதத்தில் துவங்கும். பீகாரிலிருந்து ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் துவங்கும் வரத்து நம் மாநிலத்தின் கோழி தீவன தேவையை நிறைவேற்றும். தற்போதைய நிலையில் நல்ல தரமான மக்காச்சோளம் குவிண்டாலுக்கு பண்ணை விலையாக ரூ.1,500 முதல் ரூ.1,520 வரை உடுமலை ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் விற்கப்படுகிறது. குறைந்த ஏற்றுமதி இருந்தாலும், உள்நாட்டு தேவையின் காரணமாக அறுவடையின் போது விலை நிலையாக இருக்கும்.

விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 15 ஆண்டுகளாக உடுமலைப்பேட்டை ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய மக்காச்சோளத்தின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆராய்ந்தது.

பொருளாதார அளவைகளின் அடிப்படையில், தரமான ரபீ மக்காச்சோளத்தின் விலை அறுவடை காலமான குவிண்டாலுக்கு பண்ணை

விலையாக ரூ.1,500 – ரூ.1,550 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில், மக்காச்சோள விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள:</u>**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர் - 641 003.

தொலைபேசி :- 0422 -2431405


**<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>**


பேராசிரியர் மற்றும் தலைவர்

சிறு தானியங்கள் துறை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர் - 641 003.

தொலைபேசி எண் :- 0422-2450507